*6*

# நாம் விசுவாசிக்கிறபடியே நடத்தல் (1:19-27)

சாலொமோன், பிரசங்கி 6ம் அதிகாரத்தை, ஊடுருவும் வார்த்தைகளுடன் தொடங்குகிறார்: "சூரியனுக்குக் கீழே நான் கண்ட வேறொரு தீங்குமுண்டு; அது மனுஷருக்குள்ளே பெரும்பாலும் நடந்துவருகிறது" (பிரசங்கி 6:1). நமது படிப்பை இந்த வார்த்தைகளுடன் அறிமுகப்படுத்துதல் ஏற்புடையதாகக் காணப்படுகிறது, ஏனெனில் பாவம் என்பது தற்போது நிலவுகிறது, மற்றும் அது கிறிஸ்துவின் சரீரத்தினுள் சபையில் யாக்கோபின் காலத்தில் இருந்தே நிலவிவருகிறது. இந்தப் பொல்லாங்கானது நம்மைச் சுற்றிலும் உள்ள உலகத்தில் நமது செயல்திறனை முடக்கியுள்ளது. இது, நாம் அறிந்துள்ள மக்கள் மீது நமது செயல்தாக்கத்தை ஒன்றுமற்றதாக்குகிறது மற்றும் நமது செல்வாக்கைப் பயனற்றதாக்குகிறது. விவாக இரத்து என்பது கணவர்கள் மற்றும் மனைவியர்களுக்கு இடையிலான பிரச்சனையல்ல, ஆனால் நமது படிப்பு மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துல் ஆகியவற்றிற்கு இடையிலான பிரச்சனையாக, நமது கேள்விப்படுதல் மற்றும் நமது செயல்கள் ஆகியவற்றிற்கு இடையிலான பிரச்சனையாக, நாம் எதை விசுவாசிக்கிறோம் மற்றும் நாம் எவ்வாறு நடந்துகொள்கிறோம் என்பவற்றிற்கு இடையிலான பிரச்சனையாக உள்ளது. யாக்கோபு ஏற்கனவே, பரீட்சைகள் மற்றும் சோதிக்கப்படுதல்கள் ஆகியவற்றின் பிரச்சனைகளைக் கையாண்டிருக்கிறார், ஆனால் இப்போது அவர் தமது நிருபத்தின் பின்வரும் அடிப்படை ஆய்வுக்கருத்தை விரிவாக்கம் செய்கிறார்: *விசுவாசம் என்பது நாம் வாழும் மற்றும் செயல்படும் வழியில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது.*

ஒரு விஷயத்தை விசுவாசித்து ஆனால் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட இன்னொரு விஷயத்தை நடைமுறைப் படுத்துவதாகக் கூறுகிறவர்களை நாம் உற்றுக் கவனிக்கும்போது, அவர்களை மாய்மாலக்காரர்கள் என்று வழக்கமாக நாம் அழைக்கிறோம். நமது ஆங்கில வார்த்தையான "hypocrisy" ["மாய்மாலம்"] என்பது, மேடையில் ஒரு பாகத்தை அல்லது பாத்திரத்தை நடிப்பதைக் குறிப்பிடும் ஒரு கிரேக்க வார்த்தையில் இருந்து தேடிக்கண்டுபிடிக்கப்பட முடியும். மதத்தில் "மாய்மாலம்" என்பது மிகவும் அடிக்கடி கண்டறியப்படுவதாகக் காணப்படுவது ஏன் என்பதை எவரொருவரும் விளக்கியுரைக்க இயலாது. ஞாயிற்றுக்கிழமை யன்று சபை ஆராதனைக்குச் சென்று எல்லா வழியிலும் பங்கேற்றும், வாரத்தின் மற்ற ஆறு நாட்களிலும் பாவம் நிறைந்த வாழ்வை வாழுகிற யாராவது ஒருவரைப் பற்றி ஏறக்குறைய ஒவ்வொருவரும் அறிந்து இருக்கிறோம். தங்கள் வாழ்வில் எவ்வித கீழ்ப்படிதலும் இன்றி உதடுகளினால் மாத்திரம் உறுதிப்படுத்துகிற மக்கள் மாய்மாலக்காரர்கள் என்று இயேசு கூறினார் (லூக்கா 6:46).

உண்மையான விசுவாசமானது, ஒருவர் தமது சிந்தனை, நமது நிலைப்பாடு, தமது மொழி, தமது பழக்கவழக்கங்கள், தமது நண்பர்களைத் தெரிவு செய்துகொள்ளுதல் முதலியவற்றில் வேறுபாட்டை ஏற்படுத்துகிறது என்பதை

யாக்கோபு எழுதிய நிருபம் தெளிவாக்குகிறது. ஆவிக்குரிய தன்மையில் நமது உரிமைகோருதல்கள் பொருட்படுத்தப்படுவதில்லை, ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படிக்கு நமது வாழ்வைக் கட்டுப்படுத்துதலே பொருட்படுத்தப் படக்கூடியதாக உள்ளது.

1:19-27ல், நமது விசுவாசம் நாம் வாழும் வழியில் வேறுபாட்டை ஏற்படுத்தும் மூன்று பகுதிகள் பற்றி யாக்கோபு மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடுகிறார்.

## கோபமும் நாவும் (1:19, 20)

கோபத்தைக் கட்டுப்படுத்துவதில் ஒருவரின் திறனும் அவரது நாவும், அவரது விசுவாசம் மற்றும் அவரது வாழ்வு ஆகியவை இசைவாக உள்ளனவா என்பதற்கு மிகச்சிறந்த சோதனைகளில் ஒன்றாக உள்ளது. உங்களால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடிகிறதா? நீங்கள் உங்கள் நாவை எப்போது அடக்க வேண்டும் என்று அறிந்திருக்கிறீர்களா? உக்கிரமான கோபமும் கூர்மையான நாவும் கொண்டுள்ளதாக அறியப்பட்டுள்ள ஒரு நபர், கிறிஸ்தவர் என்ற வகையில் தமது புகழ்ச்சியை மேம்படுத்தமாட்டார். அதனால்தான் யாக்கோபு, "ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்; மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே" என்று கூறுகிறார் (1:19, 20).

யாக்கோபு, இந்தப் பண்புகள் யாவற்றையும் ஒரு சூழ்நிலைக்குள் ஒன்றாகக் கட்டுகிறார். ஒரு நபர் உற்றுக் கவனிக்க வேண்டியவேளையில், கோபம் கொள்ளுவதையும் பேசத் தொடங்குவதையும் நீங்கள் எவ்வளவு அடிக்கடி கண்டிருக்கிறீர்கள்? இந்தத் தோல்வியானது, மதரீதியான சந்தர்ப்பப்பொருளில் நடைபெறும்போது, விசேஷமான குறிப்பை மேற்கொள்ளுகிறது. நூற்றாண்டுகளினூடே, கிறிஸ்தவர்கள் ஏளனத்திற்கும் பழிப்புரைக்கும் ஆளாகியுள்ளனர் மற்றும் அவ்வேளைகளில் எப்போதும் அவர்கள் கிறிஸ்துவைப் போன்ற வகையில் பதில் செயல் செய்திருப்பதில்லை. நமது சொந்த, மறுகட்டுமான இயக்கம் பற்றியும் அதைக்குறித்து அடிக்கடி ஏற்படுத்தப்பட்ட விமர்சனத்தைப் பற்றியும் நினைத்துப் பாருங்கள். நாம் விமர்சனத்திற்கு உள்ளாகும்போது எவ்வாறு பதில் செயல் செய்கிறோம்? அது நம்மை கோபப்பட வைக்கிறதா? மற்றும் அவர்களை "பேசாது" இருக்க வேண்டும் என்று நாம் கூறும்படி நம்மை சோதிக்கிறதா? "கடுங்கோபத்தோடு கூச்சலிடுதல்" மற்றும் "கோபத்தை வெளியேற்றுதல்" என்பவை, இயல்பான மற்றும் செய்வதற்குச் சுலபமான விஷயமாக இருக்கலாம், ஆனால் செய்வதற்கு அவை சரியான விஷயங்கள் அல்ல. நமது விசுவாசம் உண்மையிலேயே ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தினால், நாம் "கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும்" இருப்போம் என்று யாக்கோபு கூறுகிறார் (1:19).

# தலையும் இருதயமும் (1:21)

சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறபோது, பல்வேறு பதில் செயல்கள் வருகின்றன. அத்தேனே நகரத்தின் தத்துவவாதிகள் "ஏளனம்" செய்தனர் (நடபடிகள் 17), ஆனால் பெந்தெகோஸ்தே நாளன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்தனர் (நடபடிகள் 2). "நற்செய்தி" அறிவிக்கப்படும்போது ஏன் இப்படிப்பட்ட வேறுபாடு உள்ளது? வேறுபாடு என்பது சுவிசேஷத்தில் இருப்பதில்லை; ஆனால் மண்வகைகள் பற்றிய உவமையில் இயேசு போதித்தது போல (லூக்கா 8:4-15) வேறுபாடு என்பது வசனத்தைக் கேள்விப்படுபவர்களின் இருதயங்களில் உள்ளது.

"நடைமுறைக் கிறிஸ்தவம்" பற்றிய இந்த நிருபத்தில் யாக்கோபு, கிறிஸ்தவர்களின் அன்றாட வாழ்வில் வசனத்தினால் ஏற்படுத்தப்படும் வேறுபாட்டின் மீதான வலியுறுத்தத்துடன் இந்தப் பாடக்கருத்தைக் கையாளுகிறார். தேவனுடைய வசனத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்பதே 1:21ன் பாடக்கருத்தாக உள்ளது. அந்த வசனமானது "இரட்சிக்க" வல்லமையுள்ளதாக இருக்கிறது, ஆனால் கிறிஸ்தவரின் இருதயத்தில் அது "நாட்டப்பட" (ஆழமாக வேரூன்ற) அவர் அனுமதித்தால் மாத்திரமே, அது அந்த வல்லமையைக் கொண்டிருக்கும்.

வசனத்தை இவ்வாறு ஏற்றுக்கொள்ளக் கூடிய இருதயத்தை உருவாக்குதல் பற்றி நாம் எவ்வாறு நடந்துகொள்கிறோம்? இவ்வசனத்தில், வசனத்தைத் தக்கவகையிலும் நல்ல செயல்விளைவுடனும் ஏற்றுக்கொள்ளும் இருதய மானது, அத்தியாவசியமான இரண்டு பண்புகளைக் கொண்டுள்ளதாக அடையாளப்படுத்தப்படுகிறது. முதலாவது அது, "எல்லாவித அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டதாக" இருக்க வேண்டும். சிலருடைய இருதயங்களில் இடம் இல்லாததால், அவர்கள், வசனம் "நடப்படுவதை" அனுமதிக்கத் தவறுகின்றனர். வாழ்வின் பழைய வழியில் இருந்து அவர்கள் மனந்திரும்பியது முழுமையானதாக இருப்பதில்லை. ஒரு நபர், பழைய வாழ்வில் எஞ்சியுள்ள பாவம் நிறைந்த தன்மை யாவற்றையும் ஒழித்துப் போடாத வரையில், கிறிஸ்தவப் பண்பையும் ஒப்புக்கொடுத்தலையும் உண்டாக்குவதில் சுவிசேஷமானது அதன் முழுச் செயல்விளைவைக் கொண்டிராது. இரண்டாவது, சுவிசேஷத்தின் கடிந்துகொள்ளுதலையும் ஆலோசனையையும் ஒருவர் "தாழ்மையாக" ஏற்றுக்கொள்ள வேண்டும். சில கிறிஸ்தவர்கள் செய்ய விரும்புகிற பாவத்தை வேதாகமம் கடிந்து கொள்ளும்போது, அவர்கள் கோபம் கொள்கின்றனர் மற்றும் அந்த விஷயத்தைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்த பிரசங்கியார் அல்லது போதகர் மீது அவர்கள் சீற்றம் கொள்கின்றனர். ஒரு கிறிஸ்தவர் அவ்விதமான வழியில் இருந்து வெளியேறி வசனத்தின் மூலமாகத் தேவன் தமது வாழ்வை நடத்திச் செல்ல அனுமதிக்காத வரையில், அவர் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்க முடியாது. தூய்மையும், தாழ்மையுமே நல்ல மற்றும் பலன் நிறைந்த இருதயத்தின் கூறுகளாக உள்ளன. அந்தப் பண்புகளைக் கொண்டுள்ள இருதயமுடைய எந்தத் தனிநபரும் ஆவிக்குரிய பலத்திலும் ஒழுக்கத்திலும் வளருவார்.

# நடத்தலும் செயல்படுதலும்
# *(1:22-27)*

*சுவிசேஷத்தின் சத்தியங்கள் பயன் நிறைந்தவைகளாக இருப்பதற்கு, அவைகள் உறுதியான செயல்பாடுகளாக மாற்றப்பட வேண்டும். ஆராதனை ஊழியத்தில் கலந்து கொள்ளுதல், முக்கியமான சத்தியத்திற்குச் சுருக்கமான கவனத்தைக் கொடுத்தல் மூலம் ஒரு பிரசங்கத்தைக் கவனித்தல் ஆகியவற்றின் விளைவாக, அவை ஒருவருடைய உண்மையான நடக்கையில் வேறுபாட்டை ஏற்படுத்தவில்லை என்றால், அதினால் பயன் எதுவும் இல்லை. நான் ஒரு ஊழியக்காரனாகப் பணிசெய்த ஒரு சபைக்குழுமத்தில், உரத்த சப்தமான, நேரடியான, குதிங்கால்களால் தரையை மிதிக்கச் செய்கிற மற்றும் "நரக அக்கினி, கந்தகம்" போன்ற இயல்பும் கொண்ட பிரசங்கங்களை விரும்பிய ஒரு மனிதரைச் சந்தித்தேன். அவர் பின்வாசலுக்கு வந்து, அவ்வகையான பிரசங்கமானது தம்மை நேரடியாகத் தாக்கினாலும் அதைத் தாம் எவ்வளவாக விரும்பினார் என்பது பற்றிக் கூறுவார். "மாற்றத்திற்கான ஆதாரம் எதையும் அவர் ஒருக்காலும் காட்சிப்படுத்தாது இருக்கும்போது, அவர் ஏன் அவ்வகையான பிரசங்கத்தை விரும்புகிறார்?" என்ற கேள்வி அடிக்கடி என் மனதில் குறுக்கிட்டது. ஒரு நாள் நான் அதைக் கண்டுபிடித்தேன்; அவர் தமது கழுத்தை வளைத்துக் குனிந்து, அவ்வகையான பிரசங்கத்தை எடுத்துக்கொண்டால், தாம் சரியாகி விடுவதாக நினைத்தார். யாக்கோபு மிகச்சரியாக இதையே, "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" என்று கூறுகிறார் (1:22).*

*வசனத்திற்கு நாம் கீழ்ப்படிதலின் அவசியத்தை விளக்கியுரைப்பதில், யாக்கோபு மூன்று கருத்துக்களை ஏற்படுத்துகிறார். முதலாவது, 23 மற்றும் 24ம் வசனங்களில் அவர், கேள்விப்பட்டு மறந்துபோகிற மனிதரின் இயல்பை விவரிக்கிறார். கண்ணாடியில் தமது முகத்தைப் பார்த்துவிட்டு "அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுகிற" ஒரு தனிநபரைப் பற்றி நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? வசனத்தைக் கேள்விப்பட்டு உடனடியாக அதை மறந்து விடுகிற ஒருவரைப் பற்றிக் கற்பனை செய்வதில் யாக்கோபு சிரமம் கொண்டிருக்க வேண்டும். மாய்மாலக்காரர் கவனிக்கிறார், சம்மதித்துத் தலை அசைக்கிறார், மற்றும் சத்தியத்தைத் தாம் ஒப்புக்கொண்டதை அறிவிக்கவும் செய்கிறார், ஆனால் பின்பு அவர் தாம் விரும்பியபடியெல்லாம் மிகச்சரியாக வாழ்வதற்கு திரும்பிச் செல்லுகிறார், அவ்வாறு செய்வதில் அவர் அப்போதுதான் கேள்விப்பட்டிருந்த சத்தியத்தைப் புறக்கணிக்க வேண்டியிருந்தாலும் அவர் அதைச் செய்கிறார். இரண்டாவது, 25ம் வசனத்தில் யாக்கோபு, வசனத்திற்கு கீழ்ப்படிபவர்களுக்குத் தேவனால் ஒரு ஆசீர்வாதம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது என்று கூறுகிறார். 21ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரட்சிப்பு என்பதே இந்த ஆசீர்வாதமாக இருக்கும் என்பது தெளிவாகக் காணப்படும். கடைசியாக யாக்கோபு, கீழ்ப்படிதலின் இரு பகுதிகளுடன் - அவர்கள் கேள்விப்படுதல் மற்றும் செயல்படுதல் ஆகியவற்றிற்கான இரு அறைகூவல்களுடன் - முடிக்கிறார். முதலாவது 26ம் வசனத்தில் யாக்கோபு, "உங்கள் நாவின்மீது நீங்கள் இறுக்கமாக ஆட்சிசெலுத்துகிறீர்களா?" என்று கேட்கிறார். அவர்களுக்கு நாவு ஏற்படுத்திய*

*மற்றும் நமக்கு அது ஏற்படுத்துகிற பிரச்சனைகளைப் பற்றி யாக்கோபு அறிந்திருக்கிறார்; ஆகவே, நமது விசுவாசமானது நமது நாவுக்குச் சில விஷயங்களைச் செய்ய வேண்டும் என்று திரும்பத் திரும்பஅவர் வலியுறுத்துகிறார். இரண்டாவது அவர், 26ம் வசனத்தில், நாம் தேவையில் உள்ளவர்களைச் செயல்துடிப்புடன் கவனிக்கிறோமா என்று அறிய விரும்புகிறார். தேவையை நாம் மறந்து விடுமளவுக்கு, மற்றவர்களுக்கு "எவ்வாறு" மற்றும் "ஏன்" உதவ வேண்டும் என்பது பற்றி நமது சகோதர ஐக்கியத்துவமானது மிகவும் அதிகமாக விவாதித்து இருக்கிறது! தேவையில் உள்ளவர்களை நாம் புறக்கணித்தால், நாம் மிகவும் மோசமான மாய்மாலக்காரர்களாக இருப்போம், ஏனென்றால் அவர்களைக் குறித்து நமது தேவன் எப்போதும் அக்கறையுள்ளவராக இருந்துள்ளார். மக்களின் தேவைகளைச் சந்திப்பதில் நாம் இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசு மக்களை நேசித்து அவர்களின் தேவைகளைச் சந்திப்பதற்குத் தமது வழியிலிருந்து வெளியே சென்றார். செயல்படுதலில் அவரது அன்பானது, அவர் பிரசங்கித்த செய்தியைச் சாதகமாகக் கேள்விப்படுதலை ஆதாயப்படுத்தியது. அதைக்காட்டிலும் குறைவானவற்றை நாம் செய்ய இயலாது.*

## *முடிவுரை*

*பழங்கால இஸ்ரவேல் மக்கள், தங்கள் மதத்தை சடங்கு மற்றும் சடங்காச்சாரமாகக் குறைத்துப் போட்டது என்பது அவர்களின் மாபெரும் பாவங்களில் ஒன்றாக இருந்தது. அவர்கள் நடைமுறை விஷயங்களைப் புறக்கணித்து அதன் [மதத்தின்] புறம்பான வடிவங்களினூடாக மாத்திரம் சென்றனர். தீர்க்கதரிசியான மீகா, அதைப் பற்றிய யெகோவாவின் மனப்பதிவைக் கொடுத்தார்:*

> *என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில், வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாகப்பணிந்துகொள்வேன்? தகனபலிகளைக் கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக்கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின் பேரிலும் எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின்பேரிலும், கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்க வேண்டுமோ? மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் (மீகா 6:6-8).*

*தேவனுடைய எண்ணப்போக்கு மாறியிருப்பதில்லை; அவர் இன்னமும் மாய்மாலத்தை வெறுக்கிறார். நாம் நமது விசுவாசத்தை வாழ வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.*